*For Mother-in-law Memorial Service….(2012)* (சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச்செய்து...)

Praise the Lord:

ஜீவனைக்கொடுக்கவும் அதை பரிபூரணப்படுத்தவும் வந்த ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்திற்கு ஸ்தோத்திரம் செய்கிறேன்.
இந்த ஜெபக்கூட்டத்திற்கு வருகை தந்துள்ள உங்களனைவருக்கும் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவிக்கிறேன்.

எனது Mother-in-law அவர்கள் பிள்ளைகளை வளர்த்து நல்ல நிலைக்கு கொண்டு வர எடுத்த பிரயாசங்களை மனைவி, மற்றும் மனைவியுடைய சகோதர சகோதரிகள் மூலமாகவும் நான் அறிந்த விவரங்களோடு, தாயார் இங்கு 3 முறை வந்து எங்களோடு தங்கியிருந்த பொழுது நானே பார்த்த அனுபவத்துக்கூடாக நான் சொல்ல விரும்புவது…….
**எந்த அளவிற்கு தாயார் துதி ஸ்தோத்திரம் ஜெபம் செய்தார்களோ:**
**அதே அளவிற்கு அவர்களுடைய பிரயாசமும் இருந்தது.**
தாயாரின் இந்த ஜெபத்தையும் பிரயாசத்தையும் கர்த்தர் ஆசீர்வதித்திருப்பதை அவர்களுடைய பிள்ளைகளின் வாழ்க்கையில் கர்த்தருக்குள்ளான வளர்ச்சியை பார்க்கும்பொழுது சந்தோஷமாக உள்ளது.
தாயார் வேதத்தை அறிந்த அளவிலே, அவர்கள் ஜெபத்திலே உறுதியாகவும் அவர்கள் விரும்பியதை செயல்படுத்தும் பிரயாசத்திலேயும் உறுதியாகவும் இருந்தார்கள்.
இந்த நல்ல சுபாவத்தை தாயாரின் ஒவ்வொரு பிள்ளைகளும் உற்றார் உறவினர்களும் பின்பற்ற கர்த்தர் கிருபை செய்வாராக….

**<u>ரோமர்/Romans 2:7</u>**

சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச்செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்தியஜீவனை அளிப்பார்.
**இந்த வார்த்தையின்படி தாயார் நித்தியஜீவனை பெற்றதற்காக கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்.**

பிதாவே, பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்துமுடித்தேன். என்று கிறிஸ்து ஜெபிக்கிற யோவான் 17ம் அதிகாரத்தில்….. தனக்காகவும், சீஷர்களுக்காகவும், நம் எல்லோருக்காகவும் கிறிஸ்து ஜெபிக்கிற ஜெபத்தையும் அந்த ஜெபத்திலே கிரியையின் வாஞ்சையையும் சிறப்பாக இந்த யோவான் 17ம் அதிகாரத்திலே காணலாம்.
கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது; என்ற பிலிப்பு 2:5 வசனத்தின்படி நம் ஒவ்வொருவரும் ஜெபத்திலும் கிரியையிலும் வளர கர்த்தர் நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக.

பெரும்பாலான மனித இறப்புக்களில், ஒன்றைக் காணலாம்.
இறந்தவர்களின் பெலவீனத்தையும் அவரைப்பற்றி சிந்திக்கிற உற்றார் உறவினர்களின் பெலவீனத்தையும் சிந்தித்து**……இப்படிச் செய்திருந்தால் இவர்கள் இன்னும் கொஞ்ச காலம் இருந்திருப்பார்களே** …..என்ற ஒரு எண்ணமும் கவலையும் பலருக்கு வருவதையும் அதுபற்றி பேசுவதையும் பார்த்திருக்கிறேன். அப்படி மாம்சத்திலே ஒரு வருத்தமான சிந்தனை வருவது அந்த சூழ்நிலையில் ஒத்துக்கொள்ளக்கூடியதாக இருந்தாலும்….
அதை அப்படியே வளர்த்துக்கொள்ளாமல். அந்த இறப்பின் சம்பவத்திலிருந்து….நமது சிந்தனை வளரவேண்டியது என்னவென்றால்…..
**இனி இப்படிப்பட்ட எண்ணத்திற்கு இடம் கொடுக்காமல் இருக்க,**
**ஒருவருக்கு நாம் என்ன செய்யவேண்டுமென்று நாம் நினைக்கிறோமோ,**
**கர்த்தர் மூலமாக நாம் என்ன உணர்ந்துகொள்கிறோமோ**
**அதை உற்சாகத்தோடும் நேரத்தோடும் நாம் செய்யப்பிரயாசப்பட வேண்டும்.**
கவலைப்படுவதினால் எந்த பலனுமில்லை என்பதை கிறிஸ்து நமக்கு சொல்லியிருக்கிறார்.
**நம்முடைய பெலவீனத்தை நாம் வளர்த்துக்கொள்ளாமல், நம் பெலவீனத்தை கர்த்தருடைய பெலம் மேற்கொள்ள** நம் ஒவ்வொருவருக்கும் விசேஷமாக தாயாரின் உறவினர்கள் ஒவ்வொருவருக்கும் கர்த்தர் ஆலோசனையும் பெலத்தையும் கொடுக்கும் ஆவியானவராக கூடயிருந்து வழிநடத்துவாராக.

மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் உடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவே தெய்வம் என்பதை உணர்ந்து அவரைப் பற்றிக்கொண்டு…..அவருடைய நாமத்தைத் தினமும் துதித்து ஸ்தோத்திரித்து அவரிடம் மன்றாடி ஜெபித்து, அவருடைய பெலத்தோடு கிரியையிலே உறுதியோடு செயல்பட்டு….இன்று ஆண்டவரோடு நித்திய வாழ்க்கையைப் பெற்ற தாயாருக்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செய்கிறேன். நன்றி. **Let us pray.**